## November 15, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற போன்டி ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ராதிகா சுதந்திரா சீலன் சாம்பியன் ஆனார். இது அவரின் 2- ஆவது பிஎஸ்ஏ சாம்பியன் பட்டமாகும்.
2. எகிப்தில் நடைபெறும் துப்பாக்கி சுடுதல் உலக சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் ஈஷா சிங் வெண்கலப் பதக்கம் வென்றார்.
3. சிரியாவின் ஸ்வேய்தா மாகாணத்தில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி மீண்டும் அரசுப் படையினருக்கும் துருஸ் இன ஆயுதக் குழுவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.
   i. ஸ்வேய்தா மாகாணத்தில் அரசுப் படை மற்றும் துரூஸ் ஆயுதக் குழு இடையே கடந்த ஜூலை மாதம் நடந்த மோதலுக்குப் பிறகு அங்கு போர் நிறுத்தம் அமல்படுத்தப்பட்டிருந்தது.
   ii. சிரியாவை நீண்டகாலம் ஆண்டு வந்த பஷார் அல்-அஸாத் கிளர்ச்சிக் குழுக்களின் தாக்குதல் காரணமாக கடந்த ஆண்டு டிசம்பரில் பதவியை இழந்து ரஷியாவில் தஞ்சமடைந்தார். அதைத் தொடர்ந்து, அங்கு நடைபெற்று வந்த 14 ஆண்டுகால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
   iii. ஆனால், புதிய ஆட்சியாளர்கள் நாட்டைக் கட்டுப்படுத்துவதில் சவால்களை எதிர்கொண்டுள்ளனர். பெரும்பான்மையாக உள்ள சன்னி பிரிவு முஸ்லிம்களைக் கோண்ட புதிய அரசில், அஸாத் சார்ந்துள்ள அலாவி சிறுபான்மையினருடன் பிற ஆயுதக் குழுக்கள் கடந்த மார்ச் மாதம் மோதலில் ஈடுபட்டனர்.
   iv. அப்போது அரசுப் படைகள் உதவியுடன் நூற்றுக்கணக்கான அலாவி இனமக்கள் கொல்லப்பட்டனர். இது, சிரியாவின் பிற சிறுபான்மை இனத்தவர் இடையே அச்சத்தை ஏற்படுத்தியது.
   v. இந்தச் சூழலில், தெற்கு மாகாணத்தில் உள்ளூர் சன்னி பிரிவு பெதுயின் பழங்குடிகளுக்கும் துரூஸ் ஆயுதக் குழுக்களுக்கும் இடையே பரஸ்பர கடத்தல்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து கடந்த ஜூலை மாதம் அதிகரித்தன. அதையடுத்து, சட்டம், ஒழுங்கை மீட்டெடுப்பதற்காக அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்ட அரசுப் படைகள், துரூஸ் குழுக்களுடன் மோதலில் ஈடுபட்டன.
   vi. இந்த மோதலில் 30 பேர் உயிரிழந்ததாக உள்துறை அமைச்சகம் கூறினாலும், அதற்குப் பிந்தைய புள்ளிவிவரங்கள் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. இந்த மோதலில் இரு தரப்பிலும் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்ததாக பிரிட்டனில் இருந்து செயல்படும் சிரியா மனித உரிமைகள் அமைப்பு கூறியது.
   vii. இந்த மோதலின்போது, துரூஸ் இனத்தவருக்கு ஆதரவாக சிரியா ராணுவ தலைமையகம் உள்ளிட்ட பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. பாலஸ்தீனத்தில் அரபு தேசியவாதிகளால் துரூஸ் மக்கள் துன்புறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக, 1948- ஆம் ஆண்டில் இஸ்ரேல் உருவான போது அந்த நாட்டுக்கு ஆதரவாக துரூஸ் இனத்தவர் சண்டையிட்டனர். அதற்குக் கைமாறாக, சிரியாவில் உள்ள துரூஸ் இனத்தவருக்கு ஆதரவாக இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியது.

viii. அதைத்தொடர்ந்து, அமெரிக்க மத்தியஸ்தத்தில் அரசுப் படையினருக்கும் துரூஸ் ஆயுதக் குழுவினருக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. ஸ்வேய்தா பிராந்தியத்தில் இருந்து அரசுப் படை வெளியேறியது. பிராந்திய கட்டுப்பாட்டை துரூஸ் ஆயுதக் குழு எடுத்துக்கொண்டது.

இந்த நிலையில், அங்கு மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

4. ஆப்பிரிக்க பிராந்தியத்தில் உள்ள அங்கோலா, போட்ஸ்வானா ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நாடு திரும்பினார்.
   i. கடந்த நவ. 8-ஆம் தேதி அங்கோலா சென்ற திரௌபதி முர்முக்கு அந்நாட்டு அதிபர் மாளிகையில் 21 குண்டுகள் முழங்க ராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் அதிகாரபூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, அங்கோலா அதிபர் ஜோ மேனுவல் கோன்சால்வேஸ் லோரென்சோவும், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவும் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.
   ii. அதன்பிறகு போட்ஸ்வானா சென்ற திரௌபதி முர்மு அந்நாட்டு அதிபர் டுமா கிடியன் போகோவை சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதன் விளைவாக போட்ஸ்வானாவில் இருந்து இந்தியாவுக்கு 8 சிவிங்கிப் புலிகள் அனுப்பிவைக்கப்பட உள்ளன. இந்நிலையில், இருநாட்டு பயணத்தை நிறைவு செய்த திரௌபதி முர்மு நாடு திரும்பினார்.

5. தமிழ் மொழிப் பிரிவில் 'ஒற்றை சிறகு ஓவியா' எனும் குழந்தைகள் புத்தகத்துக்காக 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் பால சாகித்திய புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்ட எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணனுக்கு தில்லியில் நடைபெற்ற விழாவில் பால சாகித்திய புரஸ்கார் விருதை வழங்கினார் சாகித்திய அகாதெமியின் துணைத் தலைவர் குமத் சர்மா.

6. பழங்குடி சுதந்திரப் போராட்ட வீரரும் காலனித்துவ எதிர்ப்பு வீரருமான பிர்சா முண்டாவின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில், இந்தியா ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 15 ஆம் தேதி ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ் (பழங்குடி பெருமை தினம்) கொண்டாடுகிறது.